திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி ஒரு தொழிற் பயிற்சி மையம் அமைக்க வேண்டுமென்றால் அதற்குப் பொதுமக்கள் இடம் கொடுக்க வேண்டுமா அல்லது கட்டிடம் கொடுக்க வேண்டுமா? இந்தத்தொழிற் பயிற்சி மையம் அமைப்பதற்கு அரசுக்கு எவ்வளவு பணம் செலவாகும் என்பதை அறிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 100 இருக்கைகள் கொண்ட ஒரு தொழிற் பயிற்சி மையம் அமைக்க வேண்டும் என்று சொன்னால் அரசாங்கத் திற்கு, தொடரா இனச் செலவாக ரூ 50 இலட்சமும். தொடர் இனச் செலவாக ரூ. 5 இலட்சமும் ஆக 55 இலட்சம் ரூபாய் செலவாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதியான அந்த நிலக்கோட்டை பகுதியில் படித்துவிட்டு மாணவ, மாணவி கள் வேலையில்லாமல் கண்ணீர் விடக்கூடிய ஒரு நிலைமை இன்றைக்கு நாட்டிலே இருந்து கொண்டிருக்கிறது. ஆகையினால் இந்தத் தொழிற் பயிற்சி மையத்தை விரைவிலேயே அதாவது 1992–93 ஆம் ஆண்டிற்குள்ளேயே ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்தால் அவர்கள் இதில் படித்து பாங்குகள் மூலமாகிலும் கடன் வாங்கி தொழிலைச் செய்து தங்களுடைய வாழ்க்கையை அமைத் துக் கொள்வார்களே, இந்த ஆண்டே அதை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கையை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகி றேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை அரசினுடைய பரிசீலனையில் உள்ளது என்று சொல்லியிருக் கிறோம். நிதிநிலையைக் கருத்தில் கொண்டு மேற்படி கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 331 திரு. சி. தாமோதரன். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

331—

கரும்புச் சாலைகள் அமைத்தல்

*4192—திரு. சி. தாமோதரன் :

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1992 மார்ச் 24]

(அ) தமிழ்நாட்டில் சர்க்கரை ஆலைகள் கரும்புச் சாலைகளை புதிதாக அமைப்பதற்கும், பராமரிப்பதற்கும் அரசுக்கு செலுத்தப்படும் செஸ் (Cess) தவறாது செலுத்தப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில். 1986 ஆம் ஆண்டு முதல் 31—8—1991 வரை நெல்லிக்குப்பம் E.I.D.— பாரி கரும்பு ஆலை அரசிற்கு செலுத்திய செஸ் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டில் உள்ள சர்க்கரை ஆலைகள், கரும்புச் சாலைகள் மேம்பாடு திட்டத்தின் கீழ் புதிய சாலைகள் போடவும், ஏற்கனவே உள்ள சாலைகளை பராமரிப்பதற்கும் செலவிட, செலுத்தப்படும் கரும்பு மேல்வரி தொகையை தவறாமல் செலுத்தி வருகின்றன. சில தனியார் துறை சர்க்கரை ஆலைகள். இந்த வரி விதிப்பை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்ததின் காரணமாக சில ஆண்டுகளாக வரி செலுத்தாமல் இருந்தன. தற்போது அவ்வாலைகள் நிலுவை வரித் தொகையை தவணை முறையில் செலுத்த அரசு அனுமதி அளித்துள்ளது. அதன்படி அவ்வாலைகள் நிலுவைத் தொகையை தவணை முறையில் செலுத்தி வருகின்றன.

(ஆ) நெல்லிக்குப்பம் இ.ஐ.டி. பாரி சர்க்கரை ஆலை 1986 ஆம் ஆண்டு முதல் 31—8—1991 வரையில் செலுத்திய கரும்பு மேல்வரித் தொகை (Sugarcane Cess) ரூ. 176,57 இலட்சங்கள் ஆகும்.

முற்பகல் 10-20

திரு. சி. தாமோதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரும்புச் சாலை அபிவிருத்தித் திட்டத்தைப் பராமரிக்க ஆலை நிறுவனங்களால் செலுத்தப்படும் 'சுகர் கேன் செஸ்'க்கு இடைக்காலத் தடை பெற்று அதன் மூலம் சாலைகள் பராமரிப்பதில் காலதாமதம் ஏற்பட்டு அது தீர்க்கப்பட்டு இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதற்காக நன்றி, அந்த வகையில் இந்த செஸ் வரி எந்த அடிப்படையில் வசூலிக்கப்படுகிறது? அதை உயர்த்தும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா? செஸ் வரி செலுத்தும் நிறுவனங்களுக்கே அந்தச் சாலை பராமரிப்பை விட அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

[1992 மார்ச் 24

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர், அவர்களே ஒரு டன் கரும்புக்கு 5 ரூபாய் செஸ்சாக செலுத்தப்படுகிறது. எனவே இந்த 5 ரூபாயை அரசு ஒரு தனிக் கணக்கில் வைத்து அரசாங்கத்தின் நிதியைச் சேர்த்து கரும்பு உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகள் பயன்படுத்தக்கூடிய சாலைகளை அரசாங்கம் அமைத்துத் தருகிறது. எனவே, தனியார் ஆலைகளே அதனைச் செய்வதற்கு விட அரசின் செயற்குறிப்பு ஆய்வில் இல்லை.

திரு. சி. தாமோதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்தில் தஞ்சை மாவட்டத்தில் சாலைகளைப் பராமரிப்பதற்குத் தனியாரிடம் விடுவது போல் ஆலை நிறுவனங்கள் அந்தப் பகுதிகளில் அமைக்கப்படுகின்ற சாலைகளை அவர்களிடமே விடுவதன் மூலம் நமது அரசாங்கத்திற்குப் பராமரிப்புச் செலவும், நிதி சேமிப்பும் கிடைக்கும் என்பதைக் கருதி விரைவாகத் தொடர்ந்து சாலை பராமரிப்பிற்கு அவர்கள் நடவடிக்கை எடுக்க ஏதுவாக இருக்கும் என்பதை கவனத்தில் கொண்டு இதை அரசாங்கம் மீண்டும் பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்க்கரை ஆலைகளே அரசுக்குத் தர வேண்டிய 5 ரூபாயைத் தர மறுத்து நீதிமன்றம் செல்கிறார்கள். எனவே, அரசாங்கம் நீதிமன்றம் சென்று சிலவற்றில் வெற்றி அடைகிறோம். சிலரை அழைத்துப் பேசி அரசாங்கத்திற்குச் செலுத்தவேண்டிய தொகையைப் பெற்று மக்களுடைய நலன் கருதி இந்தச் சாலைகளை அரசாங்கம் அமைத்துக் கொண்டிருக்கிறது. எனவே, தனியார் சாலை அமைக்கக்கூடிய பணியை அவர்களுக்கே விட்டு விடுவது பற்றிய செயற்குறிப்பு அரசின் ஆய்வில் இல்லை.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது நெல்லிக்குப்பம் பற்றிய கேள்வி. நீங்கள் நிலக்கோட்டையைச் சேர்ந்தவர்கள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: நான் கரும்பு விவசாயி பொதுவாகக் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பொதுவில் வராது, உட்காருங்கள். வினா எண் 332—திரு. சி. சுவாமிநாதன் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.